House Rent Allowance for Teachers

*3 Q.—Thiru N. SUNDARESA THEVAR: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the House Rent Allowance applicable to Municipal employees has not been given to the teachers working in the High School, Pattukottai from April, 1965 to October 1969;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) whether the Government will initiate action thereon ?

ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படி

திரு. என் சுந்தரேசத் தேவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1965 ஏப்ரல் முதல் 1969 அக்டோபர் வரை பட்டுக்கோட்டை உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு நகரசபை ஒட்டிய வீட்டு வாடகைப் படி கொடுபடாமல் இருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதற்குக் காரணம் யாது ?

(உ) அதன் மேல் நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) சென்னை நகருக்கு அருகிலுள்ள அரசு (கழக) உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் உள்ள அரசு (கழக) உயர் நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு 18—6—1970 முதல் தான் வீட்டு வாடகைப்படி கொடுக்க கல்வித்துறையின் 18—6—1970 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1031-ல் அரசு ஆணை வழங்கியிருக்கிறது.

(உ) நடவடிக்கை எதுவும் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

Trained Graduates

*4 Q.—Thiru G. SWAMINATHAN (on behalf of Thiru M. RAJAH IYER): Will the hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of Graduates, who have undergone training in the Training Colleges in our State year-war during the last three years 1969–70, 1970–71 and 1971–72 in (*a*) Mathematics, (*b*) Physical Science, (*c*) Natural Science and (*d*) Humanities;

(b) the number of Graduates out of those trained who have been absorbed in the Secondary Schools in our State; and

(c) the steps, if any, that the Government propose to take to reduce unemployment among trained Graduates ?

பயிற்சி பெற்ற பட்டதாரிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நமது மாநிலத்தில் உள்ள பயிற்சிக் கல்லூரிகளில், கடந்த மூன்றாண்டுகளில் அதாவது 1969-70, 1970-71, 1971-72-ஆம் ஆண்டுகளில், ஆண்டுதோறும் (i) கணக்கு, (ii) பௌதிக இயல், (iii) இயற்கை அறிவியல், (iv) கலைப்பாடங்கள் ஆகியவற்றில் பயிற்சி பெற்ற பட்டதாரிகள் எத்தனை பேர்?

(இ) அவ்வாறு பயிற்சி பெற்ற பட்டதாரிகளில் எத்தனை பேர் நமது மாநிலத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர் ?

(உ) ஆசிரியப் பயிற்சி பெற்ற பட்டதாரிகளிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க அரசு மேற்கொள்ளக் கருதியிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) :—

	1969–70	1970–71	1971–72	Total
(1)	(2)	(3)	(4)	(5)
கணக்கு	772	799	830	2,401
இயல்பியல்	610	607	626	1,843
அறிவியல் (இயற்கை)	536	569	649	1,754
வரலாறு போன்ற பாடங்கள்.	729	692	705	2,116
	2,647	2,657	2,810	8,114

(இ)	1969–70	1,919
	1970–71	1,712
	1971–72	1,476

1973 நவம்பர் 21]

(உ) மாநில அரசுத் திட்ட வேலைகளின் கீழ், கடந்த ஆறு ஆண்டுகளில் சுமார் 7,000 பி.டி. ஆசிரியர் பதவிகள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டன. 1973-74-ல் 375 பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் வேலை வாய்ப்பின்மையைப் போக்குவதற்கான மைய அரசுத் திட்டத்தின் கீழ் 1971-72, 1972-73 ஆண்டுகளில் சுமார் 1,000 பி.டி. தலைமை ஆசிரியர் பதவிகள் உயர் தொடக்கப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டன. 1973-74-லும் சுமார் 900 பி.டி. தலைமை ஆசிரியர் பதவிகள் இத்திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படும். 1970 அக்டோபரில் தொடங்கப்பட்ட தொழில்பழகு ஆசிரியர் திட்டத்தின் கீழ் சுமார் 400 தொழில்பழகு பி.டி. ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, if the teacher-pupil ratio is reduced, the opportunities for employment may be increased.

MR. CHAIRMAN : The hon. Member's throat is not co-operating with him.

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, if the teacher-pupil ratio is reduced, the opportunities for employment may be increased. At the same time, the quality of education may be improved and the standard of discipline may also be improved. So, will the Government consider reducing the teacher-pupil ratio from 1 :40 to 1 :30 ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆசிரியர் மாணவர்கள் விகிதாசாரத்தைக் குறைத்தால் ஓரளவிற்கு அதிக ஆசிரியர்களை நியமிக்கலாம் என்பது உண்மைதான். ஆனால் அதற்கு அதிக நிதி வசதி தேவைப்படுகிறது. இருக்கிற நிதி வசதியைக் கொண்டு நாம் ஆசிரியர் எண்ணிக்கையைக் கணக்கிட வேண்டியிருக்கிறது. மாணவர்கள் எண்ணிக்கையை ஓரளவிற்குக் குறைத்தால், ஆசிரியர்கள் எண்ணிக்கை வளரும். ஆசிரியர்கள் எண்ணிக்கை வளர்ந்தால், அதற்கு அதிக நிதி வசதி தேவைப்படுகிறது. இப்போது இருக்கிற நிதி வசதியின் அடிப்படையில் போடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 5 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு தரவேண்டும் என்று மத்திய அரசாங்கம் கொடுத்த அறிவிப்பின்படி, 10,200 பல்வேறு வகையான ஆசிரியர்களுக்கு இடம் அளிப்பதில் 1,200 பி.டி. ஆசிரியர்கள் இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. எஸ். பலராமன் : தலைவரவர்களே, எகனாமிக்ஸ் படித்த பட்டதாரி ஆசிரியர்களிடையே வேலையில்லை என்ற நிலைமை பரவலாக இருப்பது உண்மையா? இது போன்ற ஆசிரியர்களின் மனுக்களை வேலை தேடித்தரும் அலுவலகத்தில் பரிசீலிப்பதில்லை என்ற குறை மாநில அளவில் இருப்பது அரசுக்குத் தெரியுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த எகனாமிக்ஸ் படித்த ஆசிரியர்களுக்கு உயர் நிலைப் பள்ளிகளில் எகனாமிக்ஸ் ஒரு பாடமாக இருந்ததில்லை. அவர்கள் துணைப் பாடமாக எடுத்தது வரலாறு அல்லது வேறு பாடமாகத்தான் இருக்க வேண்டும். எகனாமிக்ஸ் படித்தவர்களை பி.டி. ஆசிரியர்களாக ஆக்கிவிட்டு பிறகு அவர்களுக்கு வேலையில்லையென்று சொல்ல வேண்டாம். யார் யார் எகனாமிக்ஸ் படித்து பி.டி. ஆசிரியர்களாக பாஸ் பண்ணியிருக்கிறார்களோ அவர்களுக்கு வேலை கொடுத்து ஏதாவது பாடத்திற்கு, வரலாறு போன்றவைக்கு உபயோகப்படுத்தலாம். இனிமேல் பி.டி. யில் சேர்க்கும்போது, எகனாமிக்ஸ் படித்தவர்களைச் சேர்க்காமலிருப்பது நல்லது என்று நினைக்கிறேன். ஏற்கெனவே இப்படிப் படித்தவர்களுக்கு கூடுமான வரையில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரலாம் என்ற முறையில் தான் கொடுக்கப்பட்டு வருகிறது.

Sree Meenakshi Government College for Women, Madurai.

* 5 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the subjects for the new Degree Courses in the Sree Meenakshi Government College for Women, Madurai started in July 1972;

(b) whether the existing buildings have been found to be quite inadequate after the starting of the new courses;

(c) whether new and additional buildings are under construction; and

(d) whether compound walls are being erected enclosing the portion till recently used as the Municipal Office?

ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி, மதுரை

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972 ஜூலையில் தொடங்கப்பட்ட மதுரை, ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரியில் புதிய பட்ட வகுப்புகளுக்கான பாடங்கள் யாவை?